**அம்பலங்கொட பிரதேச சபை - 2023**

----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பலங்கொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அம்பலங்கொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனஙகாணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 451,385 இற்கான செலவு மூலதனச் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்திருந்ததுடன், கணினி மற்றும் துணைக் கருவிகளின் பெறுமதி ரூபா 2,756,098 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | ரூபா 13,076,355 தொகை பெறுமதியான மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பீட்டு நட்டம் | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ரூபா 328,000 தொகை பெறுமதியான 02 டேலர்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | ரூபா 460,290 இற்கான மீண்டுவரும் செலவு மூலதன செலவென பதியப்பட்டமையை சரி செய்யும் போது மூலதனச் செலவுக் கணக்கில் இருந்து அகற்றுவதற்கு பதிலாக நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 4,422,644 தொகை காணப்பட்டதுடன், அந்தத் தொகையை தவணைகளாக செலுத்தும் போது மீளாய்வாண்டிற்குரிய ரூபா 500,000 இற்கான தொகை கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | நிதிக் கூற்றுக்களின் படி நிலையான சொத்துக்கள் சேர்த்தல் மீதி மற்றும் தேறிய சொத்துக்கள் கூற்றின் படி மீதியிடையே ரூபா 115,376 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டதுடன் நிலையான சொத்துக்கள் சேர்த்தல் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவித் தொகை கணக்கில் இடையே ரூபா 460,290 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நாட்குறிப்பு பதிவு மூலம் எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நூலகப் புத்தகங்கள் கொள்வனவு நிதிக்கூற்றுக்களில் மற்றும் துணை பதிவேடு இடையே ரூபா 267,250 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 2,287,409 தொகைக்கான 03 கணக்கு | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் மற்றும் 2021 ஜூலை 08 திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 2235/54 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி | ஆரம்ப வரைபுகளை தீர்வு செய்வதற்குரிய ஒழுங்குபடுத்தல் கட்டணம் ரூபா 90,000 தொகை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொலை தொடர்புகள் ஒழுங்குருத்தல் ஆணைக்குழுவிலிருந்து தகவல்கள் வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது என. | வர்த்தமானிக்கு இணங்க செயற்பட வேண்டும். |

#### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது செயலாளரினால் ஒரு நாளைக்கு வீட்டிற்கும் அலுவலத்திற்கும் இடையே 04 பிரயாணத் தடவைகளுக்காக செயலாளரினால் தொகுதிப் போக்குவரத்து வசதிகளின்றி சபையின் வாகனத்தை பயன்படுத்திருந்ததுடன், எரிபொருளுக்காக ரூபா 629,423 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பொருத்தமான வேலைத் திட்டமொன்று எதிர்காலத்தில் ஈடுபடுத்தப்படும் என. | கிரயம் குறைவாகக் கூடியவாறு வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 34,833,092 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 22,170,644 தொகையாக காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,502,500 | 1,538,171 | 1,527,401 | 270,001 | 1,366,200 | 1,263,512 | 1,258,523 | 259,231 |
| வாடகை | 6,631,360 | 6,349,958 | 2,659,260 | 4,570,543 | 6,329,690 | 6,628,251 | 7,884,299 | 879,845 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 201,000 | 179,207 | 105,807 | 93,200 | 76,000 | 158,513 | 322,853 | 19,800 |
| ஏனைய வருமானங்கள் | 15,384,000 | 13,982,055 | 13,192,465 | 2,496,248 | 8,397,000 | 11,719,688 | 12,678,231 | 1,706,658 |
| மொத்தம் | 23,718,860 | 22,049,391 | 17,484,933 | 7,429,992 | 16,168,890 | 19,769,964 | 22,143,906 | 2,865,534 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 2,865,534 தொகையாகக் காணப்பட்டதுடன் வருட இறுதியில் உள்ளவாறு அது ரூபா 7,429,992 தொகையாக இருந்தது. | அறவீடுகளை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 42 கிராம சேவையாளர்கள் பிரிவுகளையுடைய அம்பலாங்கொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134(1) மற்றும் (2) இணங்க வீதவரி அறவீடு செய்யப்பட்டு சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது என. | வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | படபொல மற்றும் மீடியாகொட அதிகாரப் பிரதேசங்களில் வதியும் 312 ஏக்கர் வரி உரிமையாளர்களிடம் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் ரூபா | ஆளுனரின் அங்கீகரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | பல வருட காலம் முதல் நிலுவையாகக் காணப்படும் ஏக்கர் வரி நிலுவை வருமானத்தை |

| | | | |
|---|---|---|---|
| | 259,188 தொகை பெறுமதியான நிலுவை ஏக்கர் வரி மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அறவீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | காட்சிப்படுத்தப்பட்டிருந்த 37 அறிவித்தல் பலகைள் தொடர்பாக ரூபா 211,360 இற்கான கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது அனைத்து நிலுவைத் தொகைகளும் அறவீடு செய்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என. | அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 492,067 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 20,432,979 தொகை பெறவேண்டியிருந்தது. | 2024 ஆண்டில் அறவீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட தினத்தில் நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 132 இன் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற வேண்டியிருந்த ரூபா 5,209,658 இற்கான முத்திரைக் கட்டணம் அறவீடு செய்வதற்காக சபையின் செயலாளர் உட்பட 05 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு என சபை நிதியத்திலிருந்து 02 சந்தர்ப்பங்களில் ரூபா 156,290 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தீர்மான இலக்கம் 2023/05/19/128 இன் படி செலுத்தப்பட்ள்ளது என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பாடசாலை சிறுவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் இலவசமாக வினியோகிப்பதற்கான பெறுகையின் போது சபை நிதியத்திற்கு ரூபா 808,500 தொகை நட்டமொன்று ஏற்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,831,876 தொகை பெறுமதியான 21503 புத்தகங்களை வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 10 மாத காலம் களஞ்சியத்தில் காணப்பட்டது. | உள்ளூராட்சி தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டமையால் தேர்தல் சட்டங்களுக்கு இணங்க புத்தக வினியோகம் நிறுத்தப்பட நேரிட்டிருந்தது என. | பெறுகை சட்டங்களின் படி கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 36 ஏக்கர் 04 ரூட் 9.33 பர்சஸ் அளவான 03 காணிகள் பிரதேச சபையின் அங்கீகாரமின்றி ஏல விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | அறிவிக்கப்பட்ட குறைபாடுகளை பூர்த்தி செய்யாமையால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை என. | சபையின் அங்கீகாரத்துடன் செயற்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த பிக்சிடி நீர்ச் செயற் திட்டத்தின் மூலம் 22 நீர் நுகர்வோருக்கு நீர் வினியோகிக்கப்பட்டு வந்ததுடன் நீர் மானிகள் பொருத்தி கட்டணம் அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீர் மாதிரிப் பரிசோதனை மேற்கொண்டு அதன் அறிக்கை கிடைக்கும் வரை நீர் கட்டணம் அறவீடு செய்தல் எம்மால் மேற்கொள்ளப்படவில்லை என. | விரைவாக நீர்க் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற உரிமை சபையிடம் காணப்படாத 18 காணிகளின் உரிமையை முறைப் பிரகாரம் சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சாட்டுதல் கட்டளை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | காணிகளின் உரிமையை உரித்தாக்கப்பட வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கிரீன் பீல்ட் பாதையில் பக்கவடிகால் மற்றும் அலுத்வல பாடசாலைக்கு அண்மையில் பாதையில் பக்க வடிகால் நிர்மாணிக்கும் நிர்மாண வேலைகளின் போது குறிப்பிட்ட ரேட்கள் பயன்படுத்தப்படாமையினால் ரூபா 191,035 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | உரிய ரேட்கள் பயன்படுத்தி கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| (ஆ) | தொடந்துவ கெதரவத்த பாதையில் பக்கச்சுவர் நிர்மாணிக்கும் நிர்மாண வேலை அலுவல்களுக்காக குறிப்பிட்ட ரேட்கள் பயன்படுத்தாமையால் ரூபா | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | உரிய ரேட்கள் பயன்படுத்தி கொடுப்பனவு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| 178,760 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | | |

### 3.6 மனிதவள முகாமைத்தும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள, இறந்துள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 03 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 91,394 இற்கான கடன்மீதியொன்றினை அறவீடு செய்திருக்கவில்லை. | கடன் மீதியை பதிவழிப்பதற்கு மற்றும் அறவீடு செய்வதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை ஊழியர் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |